948

Regd. No. M. 2797. (விலை அணா ஒன்று.)



VARTHAGA OOLIAN.

Trichinopoly. | Monthly Journal of Commerce, Trade and Industry. | October 1936

மலர் 5.] திருச்சினுப்பள்ளி அக்டோபர்-மீ -1936 [இதழ் 52

“ வர்த்தக ஊழியன் ” வருட சந்தா.
உள்நாட்டிற்கு ரப் ரூ. 1. கி. ரூ. 3 வெளி நாட்டிற்கு ரூ. 1½
யாதும் ஒன்றுக்கு விளம்பர விகிதம்.
அங்குலம் ஒன்றுக்கு ரூ. 1—0—0.
பக்கம் ஒன்றுக்கு ரூ. 15—0—0.
அரை பக்கத்திற்கு ரூ. 10. ராப்பர் பக்கத்திற்கு ரூ. 25
முன்பணமில்லாத விளம்பரங்கள்
பிரசுரிக்க முடியாது. நீடித்தகால விளம்பரங்களுக்கு
மானேஜருக்கு எழுதவும்.

ஆசிரியர்—திரு. டி. வி. கே. நாயுடு.

அட்டவணை.

பிராங்கின் மதிப்பு ... 71
சோப் செய்யும் முறை ... 72
கறைகளை போக்கும் வழி ... 73
துறையூர் வர்த்தக சங்கம் ... 74
பிரிட்டனும், ஜப்பானும் ... 76
நார் தொழில் ... 78
சர். ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் அவர்களின் சொற்பொழிவு ... 81
மதிப்புரைகள் ... 82
Manufacturing Palm Jaggery ... 83
Share Market Report ... 85
Trade Receips ... 86
Mr. Pollard on Trade ... 87

27 NOV 1936 MADRAS

“VARTHAGA OOLIAN”
Annual Subscription.
Inland Rough Re. 1. Glaze Rs. 3. Foreign Sh. 4.
Advertisement Tariff Per Insertion.
One inch Re. 1—0—0. One Page Rs. 15—0—0
Half Page Rs. 10—0—0. Wrapper Page Rs. 25.
Advertisement without prepayment will not be considered. For further particulars write to the Manager.

RECEIPT OF A COPY OF

‘VARTHAGA OOLIAN’

IS AN INVITATION TO SUBSCRIBE OR TO ADVERTISE.

All Correspondence, Money Orders, etc., must be addressed to —

THE MANAGER,

“VARTHAGA OOLIAN”,

TRICHINOPOLY, SOUTH INDIA.

Trade Mark.

Registered.

ஒரிஜினல்

கல்ச்சர் வைரங்கள்

விலை தோடு சைஸ் கமலம் ஒன்றுக்கு எட்டணா.

விலை பேசர் சைஸ் கமலம் ஒன்றுக்கு ஆறணா.

கேட்லாக் இனம்,

சொ. அருணாஜலம் செட்டி,

மு. ராமசாமி செட்டி,

ஷருப் வியாபாரம், திருச்சினாப்பள்ளி.

Subscribe to
The Egyptian Trade Review.

Leading Monthly organ of economic information published in the Near East.

You will thus be kept regularly informed concerning:

Import and Export Statistics
State of the Markets, prices, Customs tariff, etc.
Progress of National Industries
Trade Methods
New Firms constituted
Bankruptcies and Composition Schemes,
etc. etc.

Informations will also be supplied to all concerning Egyptian Market

Annual Subscription: abroad £0-12-0

Address:— **ALEXANDRIA, EGYPT.**

DO YOU WANT PROFITABLE GERMAN AGENCIES?

If so, you must subscribe to the
"ÜBERSEE-POST"
Germany's best Trade Journal.
FULL PARTICULARS FREE! Apply to
NEWS AGENCY, Kothawalsavadi, TRICHINOPOLY.

இனம்! இனம்!

காமசாஸ்திரம்.

ஆரோக்கியம், செல்வம், சுகம் இவைகளைக் காட்டும் ஓர் புஸ்தகம் கேட்பவர்களுக்கு இனாமாகவும், தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதசாலை,
26, பிராட்வே, மதராஸ்.

"நாணயம் நனிபேண்"

'வர்த்தக ஊழியன்''

திருச்சினுப்பள்ளி
1936-ஹூ அக்டோபர்-மீ

பிராங்கின் மதிப்பு.
(Devalution of the Franc.)

பிரான்சு தேசத்து நாணயமாகிய பிராங்கின்மதிப்பை அந்த தேசம் சமீபத்தில் குறைத்து விட்டது. பிராங்கின் மதிப்பை குறைக்க வேண்டுமென்று பிரான்சு தேச கவர்ன்மேண்டார் யோசித்துக்கொண்டிருந்தும், சந்தர்ப்பம் ஏற்படாமல் திகைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனுல் தற்சமயம் கவர்ன்மேண்டின் தலைவராக நியமிக்கப்பட்ட எம். பிளம் அவர்கள் உத்யோகத்தை ஏற்றுக்கொண்ட பின் ஏராளமான தங்கம் ஏற்றுமதியாகிறதைப் பார்த்து அவசியம் தடுக்கவேண்டுமென்ற எண்ணத்தோடும், சண்டை ஏற்பட்டால் தங்கம் பறந்து போனுல் மிகுந்த கஷ்ட நிலைமை ஏற்படுமென்றும் உணர்ந்து, எதிர்ப்புக்காரர்களையும் சமரஸப்படுத்தி, இங்கிலாந்து, அமேரிக்கா தேசங்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, ஒரு பவுனுக்கு 100 பிராங்குகளென்று பிராங்கின் மதிப்பை குறைத்து விட்டார். இம்மாதிரியே மற்ற தேசங்களும் அவைகளின் நாணய மதிபபை குறைத்திருக்கின்றன. ஆனுல் இந்தியாவின் நாணயமாகிய ருபாயின் மதிப்பைமட்டும் இன்னும் குறைத்தபாடில்லை அன்னியநாடுகளில் அந்தந்த நாட்டின் நாணயங்களின் மதிப்பை கட்டுப்படுத்துவதில் அந்தந்த தேசத்து கவர்ன்மேண்டாரே முயற்சி எடுத்துக் கோள்கிறர்கள். ருபாயின் மதிப்பை குறைக்க வேண்டுமென்று கராச்சி வர்த்தக சங்கத்தலைவர் சென்ற ஆண்டில் இந்தியாவின் எல்லா பாகங்களுக்கும் சென்று அதன் அவசியத்தைப்பற்றி பிரசங்கம் செய்தார். கவர்ன்மேண்டார் சமாதானம் சொல்லி மதிப்பை குறைக்க ஏற்பாடு செய்யவில்லை. பிராங்கு நாணயமதிப்பு குறைக்கப் பட்டதை கேழ்விப்பட்டவுடன் இந்திய சட்டசபையில் ஜனுப் மகமத் ஆமத்காஜ்மி அவர்கள் அவசரபிரேரேபணையாகக்கொண்டு வந்திருப்பதையும் அதற்கு ஆதரவாக சட்டசபையில் அங்கத்தினர்களிருந்ததையும் கேழ்க்க நமக்கு மிகுந்த திருப்தி ஏற்படுகிறது. இப்போதாகிலும் நம்தேசத்து நாணய மதிப்பை குறைக்க வேண்டுமென்று எண்ணம் உதித்ததேயென்று அவர்களை பாராட்டவேண்டும். ஆனுல் வைசிராய் அவசரப் பிரேரேபணையை நிராகரித்து விட்டாரென்று கேழ்க்கமிகுந்த வருத்தமேற்படுகிறது. இங்கிலாந்துதேசத்து நாணயமாகிய தங்க ஆதாரத்தை கைவிட்டபிறகு வர்த்தகத்தினுல் அந்த தேசத்திற்கு ஏராளமான லாபம் கிடைத்துவந்தது ஆனுல்மற்றதேசங்கள் நஷ்டமடைந்து வந்தது. உலக வர்த்தகத்தில் மாறுதல்கள் ஏற்பட்டன. இரண்டுபட்ட நாணயமுறைஇடையூறனதாகயிருந்தது. இதன்மேல் பிரான்சுக்கு தங்க ஆதாரத்தை வைத்துக் கோண்டிருக்க முடியாதேன்பதை உணர்ந்து இவ்விதம் மதிப்பை குறைக்க தீர்மானித்து விட்டது. இங்கிலாந்தும், பிரான்சும், அமேரிக்காவும் நாணய மதிப்பில் ஒப்பந்தம் செய்து கோண்டதால் மற்றதேசங்களும் ஒப்பந்தத்திற்கு இணங்கிவிடும. ஸ்விட்ஜர்லாந்து, பெல்ஜியம் இந்த உடன்படிக்கையில் சேர்ந்துகோள்ள முன் வந்திருக்கிறது. இத்தாலியும் சேர்ந்துவிடலா மேன்று யூகிக்க இடமிருக்கிறது. இதன் காரணமாக உலகவர்த்தகம் தழைத்தோங்கி வளருமேன்பதற்கு யாதொரு ஆக்ஷேபனையுமிராது. இருந்தபோதிலும் ஒவ்வொருதேசமும் உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாப்பதற்காக அன்னிய நாட்டுப்பண்டங்கள் அதிகம் நுழைய முடியாதபடி காப்புவரி ஏற்படுத்தியிருக்கிறது. சென்னை மாகாணத்தை பொருத்தமட்டில் சென்ற வருட அன்னியநாட்டு வர்த்தகத்தில் 90 லக்ஷம் ருபாய் குறைவு சாதாரணமாகவே இறக்குமதியில் குறைவு ஏற்பட்டாலும் மதிப்பும் ஒரு முக்கிய காரணம். மற்ற நாடுகளில் நிலவும் பொருளாதார கஷ்டங்களை யெல்லாம் எவ்விதம் அந்நாடுகளின் செலாவணிகளின் மதிப்பைக் குறைத்து அந்நாட்டு கவர்ன்மேண்டார் நீக்க முயலுகிறர்களோ அதேமாதிரியாக நமது நாட்டில் நிலவும் பொருளாதார கஷ்டங்களை நீக்க ருபாய் மதிப்பை குறைக்கவேண்டும் நமது தேசத்தின் செலாவணியான ருபாயின் மதிப்பை குறைப்பது மற்ற நாடுகளுக்கிருக்கும் தேவையைவிட நமக்குத்தான் மிகுந்த அவசியமானது. ஏனென்றல் மகாயுத்தத்திற்குப்பின் நமது செலாவணியின் மதிப்புதான் மிகவும் அதிகரித்திருக்கிறது ஆனுல் மற்ற தேசங்களும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலிருக்கும் மற்ற நாடுகளும் யுத்தத்திற்குப்பின் தங்கள் செலாவணிகளின் மதிப்பை வெகுவாக குறைத்துவிட்டன எனவே நம்முடைய நாடானது மற்ற நாடுகளுடன் மிகுந்த கஷ்டங்களுக்கிடையேஉலகவர்த்தகத்தில் போட்டிபோட வேண்டியிருக்கிறது. நமக்குள்ள கஷ்டங்களை போக்க வேண்டுமென்றல் நாம் மற்ற நாடுகளைப்போல் நமது செலாவணியான ருபாயின் மதிப்பை மிகவும் குறைக்கவேண்டும்.

இதன் காரணமாக நமது ஏற்றுமதிவர்த்தகம் விருத்தியடையும். நமது ருபாயின்மதிப்பைகுறைப்பதற்கு இதுவே ஏற்றசமயம்ஆகையிஞல்ருபாயின்மதிப்பை குறைக்க கவர்ன்மேண்டார்முயற்சிஎடுத்துக் கோள்வார்களேன்று நம்புகிறேம்.

சோப் செய்யும் முறை.

(How to prepare Soap.)

இதைத் தயாரிப்பதற்கு வேண்டிய பொருட்கள் முதன்மையாக நல்லதாக விருக்கிறதா என்பதைக் கவனித்தல் வேண்டும்.

(1)	டேலோ (கொழுப்பு)	10	(LB) பங்கு
	மாஹுவா எண்ணை	5	,,
	மணிலா எண்ணை	5	,,
(2)	தேங்காய் எண்ணை	10	,,
	மாஹுவா ,,	5	,,
(3)	விளக்கெண்ணை	10	,,
	சீசேம் எண்ணை	5	,,
(4)	டேலோ	4	,,
	மணிலா எண்ணை	3	,,
	மாஹுவா ,,	1	,,

மேற்கண்ட எண்ணைகள் உரைந்து போவதற்காக காஸ்டிக் சோடா உபயோகிக்கவேண்டும். அது எண்ணை அளவிற்குத் தகுந்த வண்ணம் உபயோகித்தல் வேண்டும் அதாவது காஸ்டிக் சோடா, 25 பங்கு டேலோவிற்கு 31/2 பங்கு, 25 பங்கு மணிலா எண்ணைக்கு 31/2 பங்கு, 25 பங்கு மாஹுவா எண்ணைக்கு 33/4 பங்கு சேர்க்கவேண்டும் இந்தக் கணக்கின் படிக்கு அளவை கிரமமாக கூட்டியோ குறைத்தோ கொள்ளவும்.

செய் முறை.

இதில் மூன்று வகைகளிருக்கின்றன (1) நெருப்பினுல் காய்ச்சாமலே செய்வது (Cold process) (2) நெருப்பினுல் கொஞ்சம் கொதிக்கவைத்து செய்வது (Semi boiling process) (3) நன்ருய் கொதிக்கவைத்து செய்வது (Boiling process)

நெருப்பினுல் காய்ச்சாமல் செய்யும் முறை.

எல்லா விதத்தைவிட இம்முறை மிகவும் சுலபமானது. இதை "கோல்டு பிருசெஸ்" என்பர். தேங்காய் எண்ணை 1. (L. B.) பவுண்டுக்கு சோடா "லை" பவுண்டு 1 வீதம் அதாவது சமனிடையாக எடுத்துக்கொள்ளவும். வெய்யல் காலத்தில் தேங்காய் எண்ணை உருகியிருப்பதால், அதை உருக்கவேண்டியதில்லை. மழை காலத்தில் உரைந்து போயிருந்தால் சிறிது காய்ச்சி உருக்கிக் கொள்ளவும். (சோடா "லை" என்பது சுத்தமான காஸ்டிக் சோடாவை நல்ல ஜலம் விட்டு 72 டிக்ரி வரும்படியாய் கரைத்துக்கொள்வது) பிறகு உருகிய தேங்காய் எண்ணையில் ஊற்றிக் கொண்டே, மரத்துடிப்பினுல் நன்ருய் "உப்புமா" கிளறுவது போல கிளறிக் கொண்டே வந்தால் இரண்டும் சேர்ந்து 'வெல்லப்பாகு' மாதிரி குழம்பாகும். அதிக நேரம் கிளறக்கூடாது. அப்படி கிளறினுல் சோடா வேறு எண்ணை வேருக பிரிந்துவிடும். 15 அல்லது 20 நிமிடம் கிளறினுல் போதுமானது. இப்படி கலந்த பின் மோல்டு எடுப்பதற்கு தயாராக வைத்திருக்கும் பெட்டியில் கொட்டிவிட வேண்டியது. கொட்டு முன் 'சோப்பு' பலகையில் ஒட்டாமலிருக்க சுத்த ஜலம் தடவிவைக்கவேண்டியது. பிறகு பெட்டியை பழைய கம்பளி அல்லது சாக்குப்பை இதுகளினுல், நல்ல குளிர்ந்த இடத்தில் வைக்கவும் மேற்கண்டமாதிரி ஒரு நாள் முழுதும் வைத்திருந்து பின்னுல் பெட்டியிலுள்ள சோப்பை, நமக்குத் தேவையான அளவுகளில் அறுத்துக்கொண்டு விலாச முத்திரைகளிட்டு, மேல் வரட்சியில்லாமல் சிறிது 'வழுவழு'ப்பான நமது விலாசமிட்ட காகிதங்களால் பாக் செய்து மார்க்கெட்களுக்கு விற்பனைக்கு அனுப்பலாம்.

சோப் பெட்டியிலிருந்து எடுக்கும் பொழுது மேடு, பள்ளமாக இருந்தால், சரியாகக்கிளரவில்லையென்று தெரிந்து கொள்ளவும். ரொம்பவும் கெட்டியாக விருந்தால் சோடா ஜாஸ்தி ஆய்விட்டதென்று தெரிந்துகொள்ளவும். அதிக மெதுவாயிருந்தால் சோடா கொஞ்சமாயிருக்கிறதென அறிந்துகொள்ளவும். சோடா ஜாஸ்தியாக விருந்தால் கொஞ்சம் ஜலம்விட்டு கொதிக்கவைத்தால் போதுமானது. அதேமாதிரி சோடா கம்மியாகவிருந்தால் கொஞ்சம் சோடா போட்டு கொதிக்கவைத்துக்கொள்ளவும். சாதாரணமாக சோப்பில்25% ஜலம் இருக்கும். அதிகமான ஜலம் சேர்க்க வேண்டுமானுல், சோடாவில் சேர்த்துக் கொள்ளவும். வாசனை, வர்ணம் முதலியன சேர்க்கவேண்டுமானுல், பெட்டியில் கொட்டுவதற்கு முன் கலந்து கொள்ளவும்.

டேலோ	10 (LB)	பவுண்டு
தேங்காய் எண்ணை	10	,,
காஸ்டிக் சோடா 70° Tw	10	,,

எண்ணையையும், டேலோவையும் உருக்கிவைத்துக்கொண்டு 10 L. B. சோடா 'லை' யும் சேர்த்து முன் சொன்னமாதிரி கொஞ்சம் கொஞ்சமாய் கொட்டி, கிளரி செய்யவும்.

சிறிது கோதிக்கவைத்து செய்யுமுறை.

I

டேலோ	30	lbs.
தேங்காய் எண்ணை	10	,,
காஸ்டிக் சோடா 'லை' 36°	30	,,
சிலிகேட் ஆப் சோடா 40°	50	,,
பியரல்ஆஷ்'லை' 36 (Pearl ash lye)	8	,,

டேலோவையும் எண்ணையையும் ஒரு இரும்பு பாத்திரத்திலிட்டு மெதுவாய் காய்ச்சவும். காய்ந்த உடன் பெட்டியில் கொட்டவும் கொட்டினவுடன் அதிசீக்கிரமாக காஸ்டிக் சோடா 'லை' யை விட்டு கலக்கவும். சோப்பு குழம்பாகும் வரையிலும் கிளரிக்கொண்டேயிருக்கவும். பிறகு சிலிகேட்டையும், பியரல் ஆஷையும் கலந்து சீக்கிரமாக கிளரிக் கொண்டேயிருக்கவும். போதுமான வரையில் கிளரினவுடன், சாக்குப்பைகளினுல் முன்சொன்ன மாதிரி பெட்டியை மூடி குளிர்ந்த இடத்தில் வைத்திருந்து இஷ்டம்போல் அறுத்து முத்திரையிட்டுக்கொள்ளவும்.

2

தேங்காய் எண்ணை	28 LB
டேலோ	433 ,,
காஸ்டிக்சோடா'லை' 28°	489 ,,
சோடாயம் சிலிகேட்'லை'	50 ,,

இவைகளை சேர்த்து மேல் சொன்ன பிரகாரம் செய்துகொள்ளலாம்.

3

டேலோ	31LB
தேங்காய் எண்ணை	6 ,,
ரோஸன்	6 ,,
காஸ்டிக்சோடா 'லை' 33°	32 ,,
சோடியம் கார்பனேட் 35°	8 ,,

டேலாவையும் தேங்காய் எண்ணையும் முதலில் உருக்கிவைத்துக்கொண்டு, பிறகு ரோசனை சேர்க்கவும், நன்ருய்

கறைகளை போக்கும் வழி.

(To remove Stains.)

1 தேநீர், காப்பி முதலியவைகளின் கறைகளை நீக்க:—

அப்போதுதான் பட்ட புதிய கறையாய் இருந்தால், நன்கு காய்ச்சிய பசும் பாலில் கறைபட்ட இடங்களைத் தோய்த்து வைத்தால் கறை நீங்கிவிடும்.

பழைய கறையாயிருந்தால், ஒரு வாய கன்ற பாத்திரத்தை எடுத்து அதன் மேல் அத்துணியைப் போட்டு நன்றாய் இழுத்துப் பிடித்துக்கொண்டு, கறையின் மேல் 'போரக்ஸ்' (Borax) பொடியைத் தூவி நன்றாய்த் தேய்த்து, சிறிது கொதித்த நீரை ஊற்றினால் கறை நீங்கிவிடும்.

2 மருந்துக் கறைகளைப் போக்க:—

கறைபட்ட இடங்களில் அம்மோனியாவையும், (Ammonia) டில்லர்ஸ் எர்த்தையும் (Tiller's Earth) எடுத்துப் பசையாக்கிப் பூசி, சிறிது நேரம் காய்வைத்து எடுத்து, நன்றாகத் தண்ணீரில் அலசினால் கறை மறைந்துவிடும்.

3 வியர்வைக் கறையை நீக்க:—

அம்மோனியாவெனும்திராவகத்தைக் கொஞ்சம் வெந்நீருடன் கலந்து ஒரு மணி நேரம் அதில் கறைபட்ட இடத்தை ஊறவைத்து, அதன் பின், எலுமிச்சஞ் சாற்றை அதன் மேல் தடவி வெந்நீரில் அலசி எடுத்துவிடவும்.

4 பட்டு வஸ்திரங்களில் எண்ணெய் சிக்கெடுக்க:—

அப்ளாகாரம், அஸ்கா எலுமிச்சஞ் சாறு ஆகிய மூன்றையும் சம அளவு எடுத்து கொஞ்சம் ஜலத்தில் கறைத்து, அதில் எண்ணெய் சிக்குள்ள டட்டு வஸ்திரத்தைத் தவைத்து, ஒருநாளிரவு ஊற வைத்து, மறுநாள் தோய்த்து உலர்த்தினால் கறை இருக்காது. இம்முறையில் பட்டு வஸ்திரங்களைத் தோய்த்தால் பளபளப்பாக இருக்கும்.

5 சரிகையின் அழுக்கைப் போக்க:—

பழைய கோதுமை ரொட்டித் துண்டுகள் சிலவற்றை ஒரு கோப்பையிலிட்டு அதில் சிறிதளவு நீல பவுடரைச் சேர்த்துத் தண்ணீர் விட்டு இரண்டையும் பிசைந்து, அதை அழுக்கு சரிகையின் மேல் தடவி, காயவைத்து உலர்த்திய பின் ஒரு பிரஷ்ஷை (Brush) எடுத்து அழுத்தித் தேய்க்க வேண்டும். பிறகு ஒரு வெல்வெட் துண்டினால் நன்றாக அப்பசைகளைப் போகும்படி துடைத்து விட்டால் புதிய சரிகைபோல் பளபளவென மின்னும் பார்வைக்கு வெகு அழகாய் இருக்கும்.

6 பட்டாடைகளில் படும் கறைகளை நீக்க:—

எஸ்ஸென்ஸ் ஆப் லெமன் (Essence of Lemon) ஒரு பங்கும், டர்பென்டைன் (Turpentine) ஒரு பங்கும் சேர்த்து ஒரு புட்டியில் வைத்துக் கொள்ளவும். பட்டு வஸ்திரங்களில் கறை படும்போது, மேற்கண்ட தைலத்தை ஒரு சிறிய பிரஷ்ஷினால் இரண்டு, மூன்று துளிகள் விட்டு கறை பட்ட இடங்களை நன்கு தேய்த்தால் கறை மறைந்துவிடும்.

தங்கமுலாம் போடும் விதம்.

முதலில் தங்கத்தை ஜலத்தில் கறைக்கும் விதம் தெரிந்துக்கொள்ளவேண்டும் அதாவது தங்கம் ஒரு திராவகத்திலும் கறையாது. எல்லா லோகங்களும் அக்கினி திராவகத்தில் கரைந்துவிடும். ஆனால் தங்கமோ அதில் கரையாது. அதற்காக அக்னித்திராவகம் (Nitric Acid) ஒரு பங்கும் மொரேடிக் ஏசிட் அல்லது (Hydrochloric Acid) ஒரு பங்கும் கலந்து தங்கத்தில் எழப்பு தகடு அல்லது குந்தல் தகடு துண்டு துண்டாய் நறுக்கிப்போட்டால் கரைந்துவிடும். பிறகு (Water Bath)ல் வைத்து காய்ச்சினால் மாவுமாதிரி பொடியாகப் போய்விடும். இதையும் இதன் சமனிடை பொடேசியம் சைனேட் (Potassium Cynate) எடுத்து 30 பங்கு ஜலத்தில் கரைத்தால் கரைந்துவிடும். ஷி ஜலத்தை பேட்டரியின் பக்கத்தில் வைத்து ஒரு கம்பியில் துத்தினாகத்தகடும் மற்றொரு கம்பியில் கில்ட்போடும் சாமானும் கட்டிவிட்டு விட்டால் 5 நிமிஷத்தில் தங்க மூலாம் ஏறிவிடும். பிறகு புங்கங்கொட்டை போட்டு பித்தளை பிரஷால் தேய்த்தால் மெருகுவந்து சாமான் பளபளப்பாயும் நன்றாயும் இருக்கும் நமக்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு தங்கம் ஏற்றிக் கொள்ளலாம்.

அக்டோபர் மாதத்தின் பலன்கள்.

தேங்காய், கொப்பரா, தேங்காயெண்ணெய், பிண்ணாக்கு, ரப்பர், உளுந்து, கடலை, பழவகை, மிளகாய், பனங்கட்டி, பாக்கு, புளி, கறிச்சரக்கு, மருந்துச் சரக்கு இவை விலையேறும். எள், நல்லெண்ணெய், தேயிலை, நெல், அரிசி, கிழங்குவகை, வெங்காயம், பயறு, சீனி, சர்க்கரை, வஸ்திரம், பொன், வெள்ளி சமவிலையாகும். புகையிலை விலை குறையும்.

பயிர்த்தொழில் கைத்தொழில் தாகுத் தொழில் செய்பவர்கள், மதுமாமிச வியாபாரிகள், சோதிடர் என்பவர்கள் நன்மையடைவர். சேனாதிபதிகள், நியாயாதிபதிகள், இரும்புத்தொழிலாளர், பலசரக்கு வியாபாரிகள், மந்திரிகள் வைத்தியர், தூதர், யாதவர், ஆயுதத் தொழிலாளர், அரசசேவை செய்வோர் என்பவர்கள் மத்திமலாபமும், ஊக்கமும் பெறுவர். சிற்பர், தத்துவ விசாரணிகள் பொற்கொல்லர், திருடர், பாம்பாட்டிகள், குறி சொல்பவர், நியாயவாதிகள், வைத்தியர், மருந்து வியாபாரிகள், தானியவணிகர் இவர்களுக்குத் தொழிற் குறைவும், அற்பலாபமும், பொருட் செலவும், சீவியக் கஷ்டமுமுண்டாம்.

நீரின் அடியில் பத்திரிகை படித்தல்.

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் கண்ணாடியின் மூலம், தண்ணீருக்குள்ளிருந்து நாம் எதையும் பார்க்க முடியும். நாம் தண்ணீருக்குள் மூழ்கிக் கண்ணைத் திறந்து நோக்கினோமாயின் பூமியில் பார்க்கும் காட்சிக்குப் பாதியளவு கூட நீரில் தெளிவாகப் பார்க்க முடியாது. ஆனால் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் ஒரு கண்ணாடியின் வழியாகத் தண்ணீரின் ஆழ்ந்த பாகத்தில் இருந்து பத்திரிகைகளைக் கூட மிகத் தெளிவாகப் பார்த்துப் படிக்க முடியும்.

கரைந்த பின் ஆரவைத்து (கைபொறுக்கும்படி) காஸ்டிக் சோடா'லை'யை முன் மாதிரி கலந்து குழம்ப னதும், கார்பொனேட் சல்யூஷனை சேர்த்து முன் சொன்னபடி ஆரவைத்து இஷ்டபிரகாரம் பில்லை போட்டு விற்பனைக்கு வெளிவிடலாம்.

N. B:—தேங்காய் எண்ணெயையும், டேலோவையும் தனியாக உபயோகப் படுத்தலாம். மணிலா, மாஹுவா, விளக்கெண்ணெ முதலிய எண்ணெகளை தனியாக உபயோகப்படுத்த முடிவதில்லை.

துறையூர் வர்த்தக சங்கம்.

(Thurayur Merchants' Association.)

12-9-36ந் தேதி துறையூர் வர்த்தக சங்க கூட்டம், நிகழ்ச்சி குறிப்பில் கண்டபடி, செவ்வாய்பேட்டை வர்த்தக சங்க தலைவர் ஸ்ரீ, வை. நடேசபண்டாரத்தை ஊர்வலமாக, வாத்திய கோஷங்களுடன், அழைத்துக்கொண்டுபோய், துறையூர் டி. எஸ். வி. எஸ். சபாபதி முதலியார் கடையில், காலை, 8-30 மணிக்கு கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது உள்ளூர் வியாபாரிகள் பெருங் கூட்டமாக வந்திருந்தார்கள்.

தலைவருக்கு வந்தனோபசார பத்திரம் வாசித்துக்கொடுத்த பின் தலைவர் ஸ்ரீ வை. நடேசபண்டாரம் பின்வருமாறு பேசினார்:—

அனுபவத்திலும், ஆற்றலிலும் என்னைவிட பன் மடங்கு மேம்பட்டிருக்கும் நண்பர்கள் பலர் இருக்க இச்சபைக்கு என்னை தலைமை வகிக்கும்படி கட்டளையிட்டது என்பால் உங்களுக்கிருக்கும் அன்பையே காட்டுகிறது. திரைகடல் தாண்டி, பல ஊர்களில் வாணிபஞ் செய்து உலக அனுபவம் அதிகமாய் பெற்றிருக்கும் உங்களுக்கு நீங்கள் அறியாத விஷயங்களை நான் ஒன்றும் புதிதாக எடுத்துச் சொல்லப் போவதில்லை ஆனால், சுடர் விளக்காயினும் தூண்டுகோல் அவசியம் என்னும் பழமொழிப்படி உங்களிடம் நிறைந்து காணப்படும் உலக அனுபவத்தை ஞாபகப்படுத்தி விடுவதே, என் காரியமாகும்.

ஒரு நாடு அல்லது, சமூகம், முன்னடைய விருத்தியடைய முக்கிய காரணமாயிருப்பது வாணிபமேயாகும். இன்று உலகத்தில் உன்னதஸ்தானம் பெற்று செல்வாக்குள்ளதாக காணப்படும் ஆங்கிலேய அரசாங்கம் அமெரிக்க அரசாங்கம் ஜப்பான் அரசாங்கம் போன்றவை இத்தகைய நிலைமைக்கு வந்தது எதனால் என்பதை கவனியுங்கள் நம் ஆங்கில அரசாங்கம் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் எந்நிலைமையிலிருந்தது இன்று எந்நிலைமையிலிருக்கிறது? இந்தியாவில் ஆங்கிலேயர்கள் முதன் முதல் காலெடுத்து வைத்தது வியாபாரிகளாகவேயாகும் அவர்கள் வியாபாரம் கட்டுப்பாடாகவும் திறமையாகவும் நடத்தி வந்ததினால் வியாபாரம் ஓங்கி அரசும் கைக்கூடியது. ஜப்பான் நாடு இருந்த இடமே தெரியாமலிருந்தது. ஆனால் இப்போது, உலகத்து பெரிய வல்லரசுகளில் ஒன்றாக விளங்குகிறது. அதற்கு காரணம், அதன் வியாபாரமே யாகும்.

பல பெரிய சம்பத்துகளை கொடுக்கக்கூடிய வியாபாரம், இந்நாட்டில் எந்நிலைமையில் இருக்கிறது? அதன் குறைகள் என்ன? எப்படி சீர்திருத்துவது என்பதை ஆராய்ந்து அதன்படி நடத்தினால், நம்நாட்டு வியாபாரமும், ஓங்கி நாமும் உன்னத நிலைமையை அடையலாம் என்பதில் சந்தேகமென்ன? மேனாடுகளில் நடக்கும் வியாபாரங்களை, கவனித்தால்தான், நம்நாட்டின் வியாபாரத்தின் பரிதாப நிலைமை புலப்படும். மேனாடுகளில் உற்பத்தியாகும் சகல, பொருள்களும். நல்ல லாபத்துடன், கிராக்கியுடனும் போட்டியின்றியும், விலையாக்கப்படுகிறது. அதற்கு அரசாங்க ஆதாரவும் அதிகமாய் கிடைக்கிறது. மேனாடுகளிலிருந்து வரும் எந்த பொருள்களை எடுத்துப்பார்த்தாலும் ஒன்றுக்கு பத்து பங்கு லாபத்தில், போட்டியின்றி விற்பனையாகிறது. உள்நாட்டு போட்டி அவர்களிடம் கொஞ்சமும் இல்லை. காரணம் அங்கு நடக்கும், எல்லா வியாபாரங்களும், அரசாங்க, கண்காணிப்பிலும். கூட்டுறவு முறையிலும் நடைபெறுகின்றன வியாபாரம், விரிவாகவும், அதிக லாபகரமாகவும், நடத்த ஐக்கிய பாவத்தில் நடத்துவதுதான் நலமாகும் விரிவான வியாபாரத்திற்கு, பெருத்த முதலீடு தேவை. அதற்கு பலர் முதலீடு சேர்ந்தாலொழிய தொகை மொத்தமாக சேராது தக்க கைதேர்ந்த நிபுணர்களை கொண்டு நடத்துவதாலும், உள்நாட்டு போட்டிகள் இல்லாததினாலும், அவர்கள் வியாபாரம் மேன்மை அடைகிறது வெளிநாட்டு போட்டியை தடுக்க அரசாங்கமும், தக்க பாதுகாப்பு எடுத்துக்கொள்கின்றன. உதாரணமாக மேல் நாட்டில் உண்டாகும் பட்டாணி, பழங்கள், வெண்ணெய்போன்ற சீக்கிரம் கெட்டுப்போகும் உணவுப் பொருள்களையும், கூட, அவர்கள் வெளி நாடுகளுக்கு அனுப்பி, தக்க லாபம் அடைகிறார்கள். பட்டாணியை ரசாயனமுறையில் டப்பிகளில் அடைத்து பல நாள் கெடாத முறையில் நம் நாட்டிற்கு அனுப்புகிறார்கள். இவ்விடம் காலணாவிற்கு கிடைக்கும், பட்டாணியை அவர்கள், நாலணாவிற்கு விற்றுவிடுகிறார்கள் ஆனால் நம் நாட்டில், அதை யாரும் கவனியாததினால், பழ வகைகள் இவ்விடமே பாழாக்கப்படுகின்றன. நம்தேவைக்கு அதிகமாய் உண்டாக்கப்படும், பழதினுசுகள், இங்கு அழுகியோ, அல்லது மலிவாகவோ, விற்பனை ஆகின்றன—இதைப் பற்றி நம் வியாபாரிகள், கவனிப்பதில்லை உணவுப் பொருள்களில்தான் இப்படி என்றால் துணி ஆடைகள் முதலியவைகளில், ஏதேனும் நமக்கு சௌகரியமிருக்கின்றனவா என்றால், அதுவும் மோசமாகவே போய்விட்டன இந்திய பொருள், மேல் நாட்டு பொருள்களுடன் போட்டிக்கு வந்து விலை நயமாய் விற்பனை ஆவதை அறிந்தால், தீர்வை போட்டு, தங்கள் சரக்குகளுக்கு வேண்டிய சௌகரியங்களையும், மற்ற நாட்டு சரக்குகளை தலைஎடுக்க முடியாமலும் செய்து விடுகிறார்கள்.

நம் நாட்டில், இத்தகைய அரசாங்க சௌகரியங்கள் நமக்கு எதுவும் கிடையாது. அவைகளை நாம் இனி தேடி, எற்படுத்திக்கொள்ளவேண்டும். அதற்கு நாம் அடிப்படையாக, செய்யவேண்டியதும், அதற்கு முக்கியமாய் வேண்டியதும் யாது என்பதுதான் நாம் இப்போது ஆராய்ந்து முடிவு செய்யவேண்டியதாகும். இந்திய வியாபாரிகள் ஒற்றுமைப்பட்டு ஆங்காங்கு, சங்கங்கள் எற்படுத்தி, அதன் மூலமாக தங்கள் சீர்திருத்தங்களையும், குறைகளையும், போக்கி, ஒற்றுமையை பலப்படுத்தி, ஐக்கிய பாவத்துடன், அரசாங்கத்தில், இந்திய வியாபாரத்திற்கு தக்க பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று பாடுபட்டால், இது ஆகாத காரியமல்ல இச்சமயம் இந்திய வியாபாரம் கட்டுப்பாடின்றி ஐக்கிய பலமின்றி தனித்தனியாக சிதறிக்கிடந்து, உள்நாட்டு போட்டிகளில், அடங்கிக்கிடப்பதனால், அரசாங்கங்கள், இவ்வியாபாரத்தையும், வியாபாரிகளையும் கவனிக்கவேண்டிய முறையில் கவனிப்பதில்லை இதற்கு காரணம் நாமேயாகும் ஆதலால் இன்றிருந்தே, நாம், இத்தகைய நம் சங்கங்களை பலப்படுத்தி, இவ்வாறு, ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு வர்த்தக சங்கத்தை ஸ்தாபித்து, மாகாண, தலைமை சங்கமாகிய சென்னை தென்னிந்திய வர்த்தகசங்கத்துடன் இணைத்துக்கொண்டு, நம்கு

றைகளை போக்கவும் முன்னேற்றத்தை அடையவும் நாம் பாடுபட்டு வருவோமேயானால், நாம், மேல்நாட்டு வியாபாரிகளைப்போல், உலகத்தில் உன்னத நிலைமையை அடைவது வெகுநாளாகாது!

சகோதரர்களே, ஆதலால் ஒற்றுமை, கட்டுப்பாடு, ஐக்கிய முறை இவைகளின் அவசியத்தை, நீங்கள் நன்கு, யோசித்து அறியவேண்டும். ஒற்றுமையின்றி, ஐக்கிய உணர்ச்சியின்றி, நெல்லிக்காய் மூட்டைகளாய், வெகுநாட்கள் நாம் நடந்துவந்து அடைந்த பயனை இதுவரையில் அனுபவித்து விட்டோம் இனி, இதை விட்டு ஐக்கிய பாவத்துடன், சகோதர உணர்ச்சியுடன்; சங்கங்களை பலப்படுத்தி, அதன் மூலமாய் முயன்று பார்க்க முன்வரவேண்டும். நம் கண்முன், நாம் பார்த்து வரும் நன்மைகளை, அறிந்தும் நாம், அதில் தலையிடாமற் காலதாமதம் செய்வது நம் குறைவேயாகும். ஆதலால் ஒவ்வொருவரும், புதிய உணர்ச்சியுடன், இச்சங்கத்தில் ஈடுபட்டு,ஒற்றுமையை வளர்த்து கட்டுப்பாடுடன் வேலை செய்தால், சில குறைகளை நீக்கி, உள்ளூர், உள்நாட்டு போட்டியை, இதனால், சுலபமாய் போக்கலாம். உலகத்தில், அரசுரிமைக்கு அடுத்த ஸ்தானத்திலிருக்கும் வாணிபத்தை, உயர்ந்த நிலைமையில் உள்ளதை இந்நாட்டில் “வியாபாரம் துரோக சிந்தனை” உள்ளது என்று, பொருள்படும்படியான இழிவான, நிலைமைக்கு கொண்டு வந்தது. உள்நாட்டு போட்டியே யாகும். அதற்கு காரணம், ஐக்கிய குறையும், ஒற்றுமையின்மையே யாகும். உள்நாட்டு போட்டிகளால் ஒருவருக்கொருவர் விலையில், குறைப்பதும் குறைந்த விலைக்கு தக்க, பொருள்களை தயாரித்து நல்ல பொருள் என்று சொல்லி விற்பதினால், வாங்குபவர்கள் எமாற்ற மடைந்து, வியாபாரிகள் துரோக சிந்தனை உள்ளவர்கள் என்று கருதும்படியாய் விடுகிறது. வியாபாரிகளிடம் ஒற்றுமையும், ஐக்யமும் இருந்தால் உள்ளதை உள்ளபடி, கட்டுப்பாடாய் விற்கலாம். மாவுக்கு தக்க பலகாரம் என்று வாங்குபவர்கள், நினைப்பார்கள். வியாபாரிகள் பேரில் “துரோக சிந்தனை பழி,வராது. உலகத்தில் நடைபெறும், எல்லாத் தொழில்களிலும், வியாபாரமே, கௌரவமானதும், சமூகத்திற்கும் பேருதவி யளிக்கக்கூடியதுமான தொழிலாகும். வியாபாரமும், வியாபார சமூகமும், இல்லையேல் இன்று உலகம் அடைந்திருக்கும் மேம்பாடும் நாகரீகமும் அடைந்திருக்க முடியாது என்று நிச்சயமாய்க் கூறலாம், உலக க்ஷேமத்தில், இவ்வளவு முக்கியமாய் உழைக்கும், ஒரு ஸ்தாபனத்திற்கு வசைச்சொல், வருவதற்கு காரணம், உள் நாட்டு போட்டியே யாகும். ஆதலால் இவைகளை போக்க, நம் சங்கங்களை வலுவுபடுத்தி, அதன் மூலமாக அரசாங்கத்தில் நாம் மன்றாடவேண்டும்.

இச்சமயம் அரசாங்க சபைகளிலும், சட்டசபைகளிலும் வர்த்தக பிரதிநிதிகளாய் இருக்கும் நம் நண்பர்கள், வியாபாரிகளுடைய பிரிவிலேயே இருந்து போகவில்லை. இனிவரும் தேர்தல்களில் வியாபார சங்கங்களுக்கு அத்தகைய பொருப்பு இருக்க வேண்டும். அதற்கு அஸ்திவாரமாய் இருக்கும் வியாபார சங்கங்கள், ஆங்காங்கு பலப்படுவது இன்றியமையாதது தக்க வீரனுக்குவாள் எவ்வளவு முக்கியமோ, அதைப்போல், நமக்கு சங்கங்கள் ஒரு இன்றியமையாத கருவியாகும். கருவி திறமாயில்லாத வரையில், வெற்றியை எதிரி பார்க்க முடியுமா? ஆதலால், சகோதரர்களே நாம் மேன்மைக்கு வரவேண்டுமானால், நம் சங்கங்களை பலப்படுத்த முன்வாருங்கள். ராமன் ஆண்டால் என்ன ராவணன் ஆண்டால் என்ன என்று இருந்தால், உபயோகமில்லை. எரி உடைந்து வரும் நிலையிலிருக்கும் போது, ஒவ்வொருவரும் அதை பந்தோபஸ்து செய்ய பாடுபடவேண்டும் எனக்கென்ன உனக்கென்ன என்று அவரவர்கள் சுய நலத்தை கவனித்தால், எல்லோரும், தண்ணீரில் அடித்துக்கொள்ளப்படுவது நிச்சயமல்லவா?

நீங்கள், இத்தனை வியாபாரிகள் இங்கிருந்தும், இத்தனை வருஷங்களாய் சங்கம் தோன்றாதிருந்தது, நம் கவனக்குறைவே காட்டுகிறது. நல்ல காலத்தின் அறிகுறியாக இச்சங்கம் தோன்றி இப்போது 10 மாதமே யாவதாக கேள்விப்படுகிறேன். இச்சங்கத்தில் எல்லோரும் அங்கத்தினர்களாய் சேர்ந்து இதை திரும்பவும் ஒற்றுமையாக நடத்தி முன்னுக்குக்கொண்டுவர பாடுபடவேண்டும், இச்சங்க மூலதனத்தையும். வரவுகளையும் அதிகப்படுத்தி இதை ஒரு சக்தியும் செல்வாக்குமுள்ள, ஒரு ஸ்தாபனமாக்க வேண்டும் சகோதரர்களே நீங்கள் எல்லோரும் ஒற்றுமையுடன், ஊக்கங்காட்டினால், இது ஆகாத காரியமல்ல அத்தகைய உயர்ந்த ஆற்றலையும் ஊக்கத்தையும், கொடுக்கும்படி, சர்வ வல்லமையுள்ள கடவுளைப், பிரார்த்திக்கிறேன்.

தலைவர் முகவுரைக்குப் பின், ஸ்ரீ. ம. வி. ராஜு, சேலம், என் ராமராவ், சுப்பராவ், கோபால் செட்டியார், முதலியவர்கள் ஒற்றுமையின் முக்கியத்தையும் சங்கங்களின் அவசியத்தைப்பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள்.

திருச்சி வர்த்தக தொழிலாளர் சங்கம்.

15—9—36 செவ்வாய்க்கிழமை மாலை 6-மணிக்கு கமான்வளைவுக்கு மேல்புரம் ஸ்ரீ மாரியம்மன் கோவில் முன்னிலையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது வக்கீல் தோழர் T. P. வேதாசலம் B. A., தலைமை வகித்தார் தோழர்கள் எஸ். அழகிரிசாமி ராஜு K. A. P. விஸ்வநாதம், L. A. கபூர் பூவாளூர் பொன்னம்பலனார் ஆகியவர்கள் வர்த்தகத் தொழிலாளர்கள் எனய தொழிலாளர்களைவிட மிகவும் மோசமாக நடத்தப்படுகின்றன ரென்றும் இரவு 12 மணி வரை உழைக்கும் குமாஸ்தாக்களுக்கு மாதம் ஒரு நாள் அவசியம் விடுமுறை கொடுக்கப்படல் வேண்டுமென்றும் வர்த்தகர்களும் இதுபோலவே அநேகமாக பகல் சாப்பாடு மாலை 5, 6, மணிக்கு சாப்பிடுகின்றனர் என்றும், சுகாதாரத்தை உத்தேசித்தேனும் இரு பாலருக்கும் விடுமுறை அவசியமென்றும் பேசினார்கள். அன்று ‘வர்த்தகத் தொழிலாளர் சங்கம்’ என்ற சங்கம் நிறுவப்பட்டது. தலைவர் தோழர் K. A. P. விஸ்வநாதம் அவர்கள், உபதலைவர்கள், P. கந்தசாமி பிள்ளை, M. சிவகுருநாத பிள்ளை, காரியதரிசி S. அழகிரிசாமி ராஜு, உப காரியதரிசிகள், S. ராதாகிருஷ்ணய்யர், K. வெள்ளச்சாமி. நிர்வாகஸ்தர்கள், 1. P. V. சண்முகஞ் செட்டியார், 2. K. ரெத்தினம் பிள்ளை, 3. P. மாணிக்கம், 4. M. மலைக்கொழுந்து செட்டியார், 5. தாயுமான பிள்ளை, 6. காத்தாபிள்ளை 7. M. கருப்பய்யா, 8. M. சுப்பிரமணிய பிள்ளை, 9. குருசாமி பிள்ளை, 10. ரா. அழகப்பிள்ளை. பொருளாளர் K. பிச்சை பிள்ளை. கணக்கு பரிசோதகர் இராமாமிர்தம் ஆகியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். காரியதரிசியவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் 8-30க்கு இனிது கலைந்தது.

குறிப்பு:— “வர்த்தக தொழிலாளர் சங்கம்” என்பதை விட வர்த்தக குமாஸ்தாக்கள் சங்கம் என்ற பெயர் பொருத்தமாக இருக்குமென்று நமது அபிப்பிராயமாகும், ஈரோடு முதலிய பல ஊர்களிலும், வர்த்தக குமாஸ்தாக்கள் சங்கம் என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக நமக்கு தெரியவருகிறது. வருங்கால வர்த்தகர்களாய் உள்ள குமாஸ்தாக்கள் தங்கள் முதலாளிகளுடன் ஒத்துழைத்து சங்கத்தை வெற்றிகரமாக நடத்திவரும்படியாய் எதிர்பார்க்கின்றோம். (ப-ர்.)

பிரிட்டனும், ஜப்பானும்.

(Britain and Japan.)

"முதன் முதலில் லங்காஷயரில்தான் ஜப்பானியருக்கு வெற்றி கிடைத்தது. 1914 முதல் 1918-ம் வருஷத்திற்குள்ளாக லங்காஷயரின் பருத்தி வியாபாரம் மிகவும் கலகலத்துவிட்டது. அந்த சமயத்தில் லங்காஷயர் சப்ளை செய்து கொண்டிருந்த இந்தியா, சீனம் முதலிய மார்கெட்டுகளை ஜப்பான் தன் வசமாக்கிக்கொண்டது தவிர, ஜப்பானிய மார்கெட்டும், லங்காஷயரை எதிர்பார்க்காத நிலைமைக்கு வந்துவிட்டது. அப்போது கைப்பற்றிய மார்க்கெட்டுகளை அது இன்னும் கைவிடாமல் பாதுகாத்துக் கொண்டிருக்கிறது.

கடந்த பத்தாண்டுகளாகத் தான் பிரிட்டன் மீதும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மீதும் ஜப்பானியப் படையெடுப்பு பலமாக தாக்க ஆரம்பித்தது. இதனால் பிரிட்டிஷ் தொழிலாளி அவஸ்தைக்கு உள்ளாகிவிட்டான். பிரிட்டிஷ் வியாபாரியும் தத்தளித்துக் கொண்டிருக்கிறான். என்றாலும் கூட, 1929-ம் வருஷம்வரையில் ஜப்பானிடமிருந்து பிரிட்டன் விலைக்கு வாங்கிய சரக்குகளைவிட அதிகப்படியாகவே, பிரிட்டன் ஜப்பானிடம் விற்பனை செய்துக்கொண்டிருந்தது. ஆனால் அதன் பிறகு நிலைமை மாறிவிட்டது. 1933-ம் வருடம் 20 லக்ஷம் பவுன்களிலிருந்து சென்ற வருடம் 42½ லக்ஷம் பவுன்களுக்கு ஜப்பானிய வியாபாரம் வளர்ந்திருக்கிறது.

ஜப்பானியச் சரக்குகளில் பட்டுதான் ஏராளமாக இங்கு இறக்குமதி யாகின்றது. சென்ற வருடத்தில் மாத்திரம் 1,181,000 பவுன்களுக்கு அது பட்டு அனுப்பியிருக்கிறது. இதைத் தவிர, பட்டுத் துணிமணிகள் வகையில் 802,000 பவுன்களுக்கு சரக்கு வந்திருக்கிறது. பிரிட்டனிலுள்ள ஒவ்வொரு பெண்ணும் (சின்னஞ்சிறு பெண் உள்பட) தலா ஒரு சதுர கஜ ஜப்பானியப் பட்டை உபயோகப்படுத்துகிறாள்.

சாதாரண ஜவுளிகளில், இந்த வருட முதல் 5 மாதங்களில் மட்டும் 213,000,000 கஜமுள்ள துணிகளை ஜப்பான் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருக்கிறது. இதில் இந்தியாவுக்கு மட்டும் 34,000,000 கஜங்களும், 23,000,000 கஜங்கள் ஆஸ்திரேலியாவுக்கும் போயிருக்கின்றன. இதே 5 மாதங்களில் பிரிட்டன் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருப்பது 23,000,000 கஜங்கள் தான். அதாவது ஜப்பான் ஆஸ்திரேலியாவுக்குமட்டும் எவ்வளவு அனுப்பியிருக்கின்றதோ, அவ்வளவு தான் பிரிட்டன் எல்லா நாடுகளுக்கும் சேர்த்து அனுப்பியிருக்கிறது.

ஒரு பிரபல பிரிட்டிஷ் ஜவுளி வியாபாரி இதைச் சுருக்கமாக விளக்கிவைத்தார் அது பின்வருமாறு:—

"எட்டு வருடங்களுக்கு முன்பு ஜப்பானைவிட 8 மடங்கு அதிகமாக நாம் ஏற்றுமதி செய்து கொண்டிருந்தோம், இப்போது ஜப்பான் நம்மைவிட 10 மடங்கு அதிகமாக ஏற்றுமதி செய்து வருகின்றது."

வர்த்தகத்துறையில், நம்முடைய சாம்ராஜ்யத்தில் ஜப்பான் வெற்றிக்கு மேல் வெற்றியடைந்து கொண்டிருக்கிறது. கிழக்கு ஆப்பிரிக்காவில், 100-க்கு 38 பங்கு பட்டு, ஜவுளி வியாபாரத்தை ஜப்பான் கைப்பற்றிவிட்டது. இதைத் தவிர்த்து ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து, தென் ஆப்ரிக்கா, வெஸ்ட் இண்டீஸ் முதலிய இடங்களிலும் ஜப்பானிய வியாபாரந்தான் ஆதிக்கம் பெற்றிருக்கிறது. ஒரு காலத்தில் ஜப்பானிய சரக்கே ஜமெய்காவில் கிடையாது. பிரிட்டன் தான் எல்லா சரக்குகளையும் அங்கு சப்ளைசெய்துக் கொண்டிருந்தது. இப்போது ஜப்பான் ஜவுளி பட்டுதான் அங்கே அதிகமாய்க் காண முடிகிறது.

டாங்கனிகாவில் 1932வருடம் மொத்தம் 82,335 கஜம் துணிகள் இறக்குமதியாயிற்று. இதில் 82,308 கஜம் துணி ஜப்பானுடையது!

பூராவும் நம்முடையதாயிருந்தாலும் கூட 27 கஜம் எங்கே, 82327 கஜம் எங்கே?

ஆப்ரிக்கா,வெஸ்ட் இண்டீஸ், எகிப்து முதலிய இடங்களுக்கு முன்பெல்லாம் லங்காஷயரின் டர்க்கி டவல்கள் ஏராளமாக ஏற்றுமதி யாகிக்கொண்டிருக்கும். இப்போது அந்த வியாபாரம் முழுதும் ஜப்பான் வசம் போய்விட்டது, மற்றும் நமது டர்க்கி டவல்களைவிட, ¼ பங்கு விலை, குறைவாகவே அவர்கள் விற்கிறார்கள்!

1929-ம் வருஷம் வரையில் ரப்பர் பூட்சு வியாபாரத்தில் ஜப்பான் கலந்து கொள்ளாமலிருந்தது. ஆனால் அதற்குப் பிறகு 1931-ம் வருடத்தில் 3,000,000 ஜோடி பூட்சுகளை இங்கு அனுப்பிவைத்தது உடனே அதிகத் தீர்வை போட்டு தடுத்தோம். ஆனால் ஜப்பானில் பெரிய பெரிய பூட்சு செய்யுந் தொழிற்சாலைகள் இப்போதுதான் ஏராளமாக உற்பத்தியாகி யிருக்கின்றன.

3 வருடங்களுக்கு முன்னால் ஜப்பான் பட்டு இறக்குமதியாகாத வண்ணம், அதிக தீர்வையை விதித்தோம். ஆனால் அதன் பிறகுதான் முன் பிறந்ததைவிட 76 மடங்கு அதிகமாய்ப் பட்டுகளை அது அனுப்பிவைத்திருக்கிறது!

கடந்த சில ஆண்டுகளாய் துணியால் செய்த மேல்ஜோடுகள் (ஸ்டாகிங்ஸ்) வருடத்துக்கு 10 லட்சம் ஜோடி வீதம் அனுப்பிக்கொண்டிருக்கிறது. 25,000,000 எலெக்டிரிக் விளக்குகள் அனுப்புகிறது. இன்னும் விதம் விதமான எத்தனையோ ஜப்பானிய சரக்குகள் வந்து குவிகின்றன.

சில்க் மப்ளர்கள், சில்க் பைசர் மாக்கள், சில்க் துணிமணிகள், தைத்த ஷர்ட்டுகள், கப்பல் கப்பலாய் ஜப்பானிலிருந்து சுமார் 10,000 மைல்கள் தாண்டி இங்கு வருகின்றன, தைத்து விற்கிற ஜப்பான் சில்க் ஷர்ட்டு மிக மிக சரசமாகவுமிருக்கிறது. அதைப்போல சில்க் மட்டும் வாங்குவதென்றாலும், நமது வியாபாரிகளுக்கு அதைவிட அதிக விலையாகும். இதே போலத்தான் எல்லாச் சரக்குகளும் சரசமாக விற்கப்படுகின்றன. கைக்குட்டைகளின் ஓரத்தை மடிப்பதற்காக நமது தொழிற்சாலைகளில் கொடுக்கப்படுகிற கூலியைவிட, ஜப்பான் கைக்குட்டை பூராவின் விலையும் குறைவாக யிருக்கின்றது!

ஜப்பானியர் மஞ்சள் நிறத்தவர்கள். சூரியன் உதயமாகும் நாடு இது இந்த சூர்யோதயநாடு தனது சாயலை பிரிட்டிஷ் தொழிற்சாலைகள் மீது வீசுகிறது.

மண்ணாலாகிய பாண்டங்களைச் செய்வதுதான் ஸ்டாபோர்ட்ஷயரின் பிரதானத்தொழில். இத்தொழிலையும் ஜப்

பான் கைப்பற்றி ஆஸ்திரேலியாவில் ஆதிக்கம் செலுத்துகிறது.

சிமெண்ட் வியாபாரமும் தளர்ந்துவிட்டது. இந்தியாவிலும், இலங்கையிலும், இதர இடங்களிலும் ஜப்பான் சிமெண்ட் பரவி வருகிறது.

தந்தப் பொத்தான்கள், பவழப் பொத்தான்கள், துடப்பங்கள், இரும்பு சாமான்கள், பவுண்டன் பேனாக்கள், பொம்மைகள், முதலியவைகளெல்லாம் ஜப்பானிலிருந்துதான். அத்துடன் என்? இயந்திரங்கள்கூட அது இங்கு அனுப்புகிறது.

சமீபத்தில் ஜப்பான் லங்காஷயருக்கு தறிகள் தயாரித்து அனுப்பட்டுமா என்று கேட்டது. விஷயம் எவ்வளவு கேலியாகப் போய்விட்டது பாருங்கள்.

ஜப்பானிய சரக்குகள் சொற்ப விலைக்கு விற்கப்படுவதற்கு மூன்று காரணங்கள் உண்டு. ஜப்பானியத் தொழிலாளர்களுக்கு கூலி மிகவும் குறைச்சலானது ஜப்பானிய நாணய மதிப்பு குறைந்துவிட்டது; ஜப்பானிய தொழிற்சாலைகளுக்கு சர்க்காரே ஆதரவளிக்கின்றது. லாபத்திற்கு தானே பொறுப்பேற்றுக் கொள்ளுகிறது.

ஜப்பானிலேயே பட்டு கிடைக்கின்றது. குறைந்த கூலியைக்கொடுத்து உற்பத்தி செய்து விடுகின்றனர். அங்கு பெண்களெல்லாம் 5ஷில்லிங் 6ஷில்லிங் வாங்கிக்கொண்டு ஒரு வாரம் வேலை செய்கிறார்கள். ஆனால் பிரிட்டனில், ஒரு பெண்ணுக்கு 18 வயது ஆகிவிட்டால், 28 ஷில்லிங் கூலி கேட்கிறாள். மற்றும் வாரத்தில் 48மணி நேரம் தான் பிரிட்டிஷ் பெண் வேலை செய்வாள்; ஜப்பானிலோ 60 மணி நேரம் வேலை செய்கிறார்கள். தினமொன்றுக்கு 10 மணி நேரம் வேலை பார்க்கிறாள். ஞாயிற்றுக்கிழமை உள்பட மாதத்திற்கு 2, 3 நாட்கள் தான் லீவு கேட்பாள்.

தொழிற்சாலைகளில் இரவும் பகலும் வேலை நடக்கும். பகல் தொழிலாளர்கள் தனி. இரவு தொழிலாளர்கள் தனி. 24 மணி நேரத்தில் 20 மணி நேரம் வேலை நடந்துகொண்டிருக்கும்.

ஆடவர்களில், வாரத்தில் 60 மணி நேரம் வேலை செய்யும் ஒருவனுக்கு கூலி 11½ ஷில்லிங்தான். ஆனால் பிரிட்டிஷ் தொழிற்சாலையில் வேலை செய்கிறவனுக்கு 80 ஷில்லிங் தரவேண்டும். அவன் 48 மணி நேரம் தான் வேலை செய்வான்.

ஆகவே, ஜப்பானிலுள்ள தொழிற்சாலைகளில் இளம் பெண்களே அடைந்து கிடக்கிறார்கள் நம்மைவிட குறைந்த கூலியே பெறுகிறார்கள். மேலும் குடிசைத் தொழில் என்பதற்கிணங்க கணவன், மனைவி, குழந்தை குட்டிகள் எல்லோரும் ஏகோபித்து தங்கள் தங்கள் வீட்டில் சிறு தொழிற்சாலைகளை நடத்துகிறார்கள்.

எலெக்ட்ரிக் விளக்குகளை உற்பத்தி செய்யும் ஜப்பானிய தொழிற்சாலைகளில் சின்னஞ் சிறு பையன்களும் பெண்களுந்தான் வேலை செய்கின்றனர். ஏனெனில் தங்கள் தங்கள் குடிசைகளிலேயே சிறுவர்கள் செய்துமுடிக்கும் வேலை இது. 13 வயது பெண்களுக்கு 3 பென்ஸ் வீதம் (சுமார் 3 அணா) கூலி கொடுக்கப்படுகிறது; தினம் 10 மணி நேர வேலைக்கு, பையன்களாயிருந்தால் 2½ பென்ஸ், வயதான பெண்களுக்கு 7½ பென்ஸ், வயதான ஆண்களுக்கு 1 ஷில்லிங்.

இவ்வளவு குறைவாகயிருந்த தொழிலாளர் பிரச்னை ஜப்பானில் இல்லாமலிருப்பதுதான் பெரிய வேடிக்கை. வழக்கமாக எளிய வாழ்க்கை நடத்துவதில் பழகிவிட்டார்கள். அவர்களுக்கு வேண்டியதெல்லாம் சொற்பந்தான். அரிசியும் மீனும் இருந்தால் போதும் மற்றும், சாமான்களின் விலை வாசியும் அங்கு பிரிட்டனைவிட எவ்வளவோ சௌகரியம்.

அதிகப்படியான கூலி வேண்டுமென்று தொழிலாளர்கள் வேலை நிறுத்தஞ் செய்கிற பழக்கம் ஜப்பானில் கிடையாது. தங்கள் கூலியைக்கொண்டு பரம திருப்தியடைகிறார்கள்.

ஜப்பானிய வர்த்தக அதிகாரி ஒருவர் கூறியதாவது:—

“உலக மார்க்கெட்டுகளில் பெரும் பங்கு எங்களுக்குத்தான் வேண்டும். ஜப்பானின் ஜனத்தொகை வருடத்திற்கு 10 லட்சத்திற்கு மேல் அதிகரித்துக்கொண்டு வருகிறது. பிரிட்டனுக்கும் ஜப்பானுக்கும் தான் இப்போது போட்டி பரஸ்பர நம்பிக்கையின் பேரில் சமாதானம் ஏற்பட்டால் கஷ்டம் தான், புகுந்த இடத்திலெல்லாம் பிரிட்டிஷார் எங்களை விரட்டியடிக்கிறார்கள். என்று கூறினார் அவரை பிரிட்டிஷ் வர்த்தக அதிகாரி கேட்டதாவது,

“அது சரி, ஜப்பானில் நீங்கள் ஷெப்பீல்ட், ஸ்டோக், மாக்ளிஸ் பீல்ட் என்ற பெயர்களைப் புதிதாகப் பல இடங்களுக்கு நீங்கள் வைத்துவருவதாகவும் அது பிறருக்கு ‘ஷெப்பீல்டில்’ செய்ததென நினைப்பதற்கு இடமளிக்கும்படி செய்வதாகவும் சொல்லுகிறார்களே அது உண்மைதானா?” அதற்கு அந்த ஜப்பானியர்,

“இடங்களின் பெயர்களை உங்களிடம் நாங்கள் கடன் வாங்கும்படியாக அவ்வளவு கேவலமான நிலைமையிலில்லை ஜப்பானியப் பெயர்களை உலகத்தில் இன்னும் பரப்புவதற்காக நாங்கள் எவ்வளவோ பாடுபட்டு வருகிறோம். உதாரணமாக, ஜப்பானுடைய உண்மையான பெயர் நிப்பான் இந்த நிப்பான் என்ற பெயரை உலகத்தார் உபயோகப்படுத்தும்படி நாங்கள் எவ்வளவோ பிரயாசைப்படுகிறோம் என்று கூறினர்.

பத்திரிகைகள் வரவு.

ஆர்ய தர்மம்	நல்வழி
இந்தியகேசரி	நவமணி
ஈழகேசரி	பர்மாநாடு
குமரன்	மிராசுதார்
குடிஅரசு	வம்பன்
கூட்டுறவு	விநோதன்
சந்திரோதயம் (F)	விஜயபாரதி
சுதந்திரவீரன்	விடுதலை
சுதேச நாட்டியம்	லக்ஷ்மி
சினிமாநேசன்	ஜகன்மோகினி
சினிமா உலகம்	ஸிட்டிகெஜட்
சினிமா ரஸிகன்	தமிழ் மலர்
சினிமா டாக்கீஸ்	கேசரி
சிறுவர் அறுவுக்	தேசபந்து
கதிர்	இந்தியதாய்
செட்டிநாடு	திருச்சி
சோதிடபரிபாலினி	வர்த்தமானி
தமிழ்நாடு	தியாகி
தனவணிகன்	நவீனம்
திருவாங்கூர்	வஸந்தகாலம்
அபிமானி	லோகமான்யா
தொண்டன்	கிராம ஊழியன்
நகரதூதன்	தமிழொழி

வர்த்தக ஊழியனை ஆதரியுங்கள்.

நார் தொழில்.

(Fibre Industry)

ஒரு நாட்டின் முன்னேற்றம் பெரும்பாலும் அதன் கைத்தொழில்களின் அபிவிருத்தியையே பொறுத்திருக்கிறது. கைத்தொழில்களுள் உலகில் எப்பொருளுக்கு அதிகத் தேவை இருக்கிறதோ அப்பொருளை பெருவாரியாக உற்பத்தி செய்வது வெற்றியடைவதற்கான முக்கிய காரணமாகும். அத்தகைய முக்கிய கைத்தொழில்களுள் தும்பு உற்பத்தி ஒன்று. தும்புகளின் உபயோகம் பல. எனவே தற்காலத்தில் தும்புகளுக்கு அதிகமான தேவையும் ஏற்பட்டுள்ளது. தும்புகளின் தேவை அதிகரிக்க ஜனங்கள் பலவகைச் செடிகளிலிருந்தும் தும்புகள் உற்பத்தி செய்ய முயற்சித்தனர். இம்முயற்சிகள் நல்ல பலன்களை யளித்தன; ஏனையவை பலனளிக்கவில்லை. உலகில் தேவை அதிகமுள்ள ஓர் பொருளை உற்பத்தி செய்யும் வேலையில் ஈடுபட்டுள்ளவர்களை பாராட்டுவதவசியமாகும். தும்பு உற்பத்தி தற்போது பிரபல்யமடைந்திருப்பதுடன் அதை மேலும் பரவச் செய்வதன் பொருட்டு லண்டனில் இம்பீரியல் விஞ்ஞானக் கழகத்தாரின் ஆதரவில் சமீபத்தில் ஓர் பொருட்காட்சி திறந்து வைக்கப்பட்டது.

செடிகளினின்றும் எடுக்கப்படும் தும்புகளின் பொருட்காட்சி ஒன்று நிறுவுவதில் பருத்தி சேர்க்கப்படாமலிருப்பது பலருக்கு அதிசயமாக விருக்கலாம்; ஆனால் அவ்வாறு செய்வதற்குத் தக்க காரணங்கள் இல்லாமல் இல்லை. பருத்தியின் உபயோகங்கள் பற்பல. பருத்தியினின்றும் செய்யப்படும் பொருள்கள் மட்டும் தனியாக ஓர் பொருட்காட்சிக்குப் போதுமானவையாகும். எனவே மேற்குறிப்பிட்ட தும்புப் பொருட்காட்சியில் பருத்தியும் சேர்க்கப்பட்டால் பல செடிகளிலிருந்தும் எடுக்கப்படும் நார்களைப் பரிசீலனை செய்ய முடியாமல் போய்விடும். அதனாலேயே தும்புப் பொருட்காட்சியை ஏற்படுத்திய கமிட்டியார் பருத்தியையும் பொருட்காட்சியில் சேர்க்கவில்லை. அப்பொருட்காட்சியில் வைக்கப்பட்டிருந்த பலவகை தும்புகளின் விபரம் பின் வருமாறு:—

கத்தாளைநார் (வடக்கு அயர்லாந்து, நார்பேக்,) சணல் நார் (இந்தியா), கத்தாளைநார் (இந்தியா), சைப்பிரஸ், மாரீஷியஸ், வடக்கு போர்னியோ, கிழக்காப்பிரிக்கா பயாசாவா, ரேவியா செடிகளிலிருந்து எடுக்கப்படும் தும்புகள் (மேற்காப்பிரிக்கா), தென்னந் தும்பு (இந்தியா இலங்கை), பனந் தும்பு (இந்தியா இலங்கை) ஆகியவை.

மேற்குறிப்பிட்ட பலவகையான நார்களடங்கிய காட்சி உண்மையில் சிலாகிக்கத் தக்கது. நார் எந்த செடியிலிருந்து, எவ்வாறு, எந்தெந்த சீதோஷ்ண நிலைமைகளில் எடுக்கப்படுகின்றதென அறியாத பாமர மக்களும் இப்பொருட்காட்சியில் கலந்துகொள்ள முடியும். தும்புகள் எவ்வாறு செய்யப்படுகின்றனவென்பதையே அறியாமல் எவ்வளவு பாமர ஜனங்கள் தும்புகளை உபயோகப்படுத்துகின்றனர். தும்புக் கைத்தொழில் வர்த்தக உலகில் மிகவும் முக்கியமான ஸ்தானம் பெற்றுள்ளது. நாகரீகமே பற்பல நூதன தும்புகள் செய்ய கண்டுபிடிப்பதைப் பொறுத்திருக்கிறதென்று கூறினும் அது மிகையாகாது. தும்புக் கைத்தொழில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள முக்கிய கைத்தொழில்களுள் ஒன்றாகும். 1935ம் வருடத்தில் மட்டும் பிரிட்டனில் தும்பு உற்பத்திக்காக 4 கோடி 80லெக்ஷம் பவுன்களுக்கு அந்நிய நாடுகளிலிருந்து மூலப் பொருள்களை இறக்குமதி செய்தன. இதிலிருந்து தும்பு உற்பத்தி உலகில் பெற்றிருக்கும் பிரதான ஸ்தானத்தையும், அக்கைத்தொழிலுக்கு மூலாதாரமாக விருக்கும் நார்ச் செடிகளின் உபயோகத்தையும் எளிதில் யூகித்துக்கொள்ளலாம்.

தும்பு பல நாடுகளில் வெவ்வேறு செடிகளிலிருந்து வெவ்வேறு சீதோஷ்ண நிலைமைகளைப் பொறுத்து உற்பத்தி செய்யப்படுகின்றது. தும்புகளின் தன்மை அவை உற்பத்தி செய்யப்படும் மூலப்பொருளையும், முறைகளையும் பொறுத்திருக்கும். மிக சீதோஷ்ணமுடைய வடக்கு ஐரோப்பிய நாடுகளில் வளரும் செடிகளிலிருந்தும் தும்பு உற்பத்தி செய்யப்படுகின்றது; உஷ்ண மண்டலத்திலுள்ள இந்தியா பிலிப்பைன் தீவுகள் முதலிய நாடுகளில் வளரும் செடிகளிலிருந்தும் தும்புகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்விரு வகைத் தும்புகளுக்கும் தன்மைகளில் பல வேற்றுமைகள் காணப்படுவதியல்பு.

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகளில் தும்பு உற்பத்தி செழிப்பான நிலைமையிலிருக்கிறதென ஏற்கனவே குறிப்பிட்டோம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் தும்பு கைத்தொழில் முன்னேற்றமடைந்திருப்பதால் இந்தியா எடுத்துக்கொண்டிருக்கும் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். இந்திய சணல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஏகபோக உரிமையாகவிருக்கிறது. கடந்த பல ஆண்டுகளாக கிழக்காப்பிரிக்காவில் கத்தாளை நார் உற்பத்தி அதிக அபிவிருத்தியடைந்துவிட்டது. கிழக்காப்பிக்கா கத்தாளை நார் இப்போது மற்ற நாட்டு கத்தாளை நார்களுடன் பலமாகப் போட்டியிட்டு வருகின்றன. தென்னை பனையிலிருந்து கயிறு உற்பத்தி செய்வது இந்தியா இலங்கை இவ்விரு நாடுகளின் தனி உரிமையாகும்; கயிறு உற்பத்தியில் இந்நாடுகளுக்கு போட்டியே கிடையாது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகளில் தும்பு உற்பத்திக்கு மூலாதாரமான செடிகள் பல ஏராளமாக வளர்க்கப்பட்டு வந்தபோதிலும், கத்தாளை பயிர் அந்நாடுகளில் அதிகமாக இல்லை. கத்தாளையிலிருந்து நேர்த்தியான துணிகள் செய்யப்படுகின்றன. எனவே கத்தாளையை பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகளில் அதிகமாக பயிர் செய்ய கவனம் செலுத்துவதவசியமாகும்.

கத்தாளை பயிரில் காலம் சென்ற ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் அதிக கவனம் செலுத்திவந்தாரென்பதும் ஈண்டுகுறிப்பிடத் தக்கது. நார் போக்கிலுள்ள சாண்டிரிங்காம் தோட்டத்தில் மன்னர்பிரான் கத்தாளை பயிர் செய்துவந்தார். அத்தோட்டத்தில் கத்தாளையின் உபயோகங்களைப்பற்றி ஆங்கிலேய துணி உற்பத்தியாளர்கள் ஆராய்ச்சிகள் நிகழ்த்தி வந்தார்களென்பதும் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடத் தக்கதாகும்.

கத்தாளைச் செடியின் பூர்வீக சரிதை மிகவும் ருசிகரமானதாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டினிறுதியில் கத்தாளை அநேகமாக வடக்கு அயர்லாந்தில் தான் பயிர் செய்யப்பட்டு வந்தது. அக்காலத்தில் பெல்பாஸ், டண்டி இவ்விரு விடங்களில் மட்டுமே பிரிட்டிஷ் துணி உற்பத்தி கைத்தொழில் நடைபெற்று வந்தது.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிரிட்டன் அதிகமாக துணியை உற்பத்தி செய்து மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தது, இருந்தாலும் ஸ்காட்லாந்து ரஷ்யாவிலுள்ள கத்தாழை நார்களையே விலைக்கு வாங்கி துணிகள் செய்தது; அயர்லாந்தும் ரஷ்யா, பெல்ஜியம் முதலிய நாடுகளிலிருந்து கத்தாழை நார்களை விலைக்கு வாங்கிவந்தது. கடந்த மகா யுத்தத்தில் ஆகாய விமானங்களின் இறகுகளை மூடுவதற்காக அதிகமான துணிகள் தேவைப்பட்டன.

இச் சந்தர்ப்பத்தில் பெல்ஜியம், ரஷ்யா இவ்விரு நாடுகளாலும் கத்தாழை நார் சப்ளை செய்ய முடியாமலாகி விட்டது.

வெளி நாடுகளிலிருந்து பிரிட்டனுக்குக் கொண்டுவரப்படும் பருத்தி நூல்கள் முதலியவை எதிரிகளின் நீர்மூழ்கிக் கப்பல்களால் தடை செய்யப்பட்டன.

எனவே பிரிட்டன் கத்தாழையை அதிகமாகப் பயிர் செய்வதற்காக பகீரதப் பிரயத்தினங்கள் செய்தது. தற்போதுள்ள நிலைமையில் பிரிட்டனில் யுத்த காலத்துக்கு முன் உற்பத்தி செய்யப்பட்டதைப்போல் கத்தாழை உற்பத்தி செய்வது சாத்தியமல்ல; அவ்வாறு சாத்தியமாக இருந்தாலும் மற்றும் இதர நாட்டுப் போட்டி நிலைமைகளைக் கவனிக்கும் போது அவ்வாறு செய்வது உசிதமுமாகாது.

உலகில் அதிகமாக கத்தாழை பயிர் செய்யும் நாடு ரஷ்யா. ரஷ்யர்கள் தம் நாட்டில் பயிர் செய்யப்படும் கத்தாழைச் செடியிலிருந்து நார் எடுத்து துணிகள் செய்கின்றனர். அத்துணிகள் ஆகாய விமானங்களின் இறகுகளை மூடுவதற்கும் பல கைத்தொழிற்சாலை அவசியங்களுக்கும், வீட்டு அவசியங்களுக்கும் உபயோகிக்கப்படுகின்றன. தன் அவசியத்திற்குப்போக மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு ரஷ்யாவில் கத்தாழை நார் மிகக் குறைவாகவே கிடைக்கிறது. இப்போது சோவியத் ரஷ்ய சர்க்காரின் கீழ் கத்தாழை உற்பத்தி அதிகரித்தபோதிலும் அதற்கேற்றவாறு அதிலிருந்து உற்பத்தி செய்யப்படும் துணிகளுக்கும் அங்கு உபயோகங்கள் அதிகரித்து விட்டன.

பிரிட்டனும் ரஷ்யாவைப் போல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கவசியமான கத்தாழையைப் பயிர் செய்ய முயற்சித்து வருகிறது. இந் நோக்கத்துடனேயே சாண்டிரிங்காம் அரண்மனையில் கத்தாழை பயிர் செய்வது சம்பந்தமாக ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன.

லண்டனில் நிறுவப்பட்டிருக்கும் பொருட்காட்சிக்கு இந்திய ஹைக்கமிஷனர் சணல், கத்தாழை, தென்னை, பனை முதலியவைகளிலிருந்து உற்பத்தி செய்யப்படும் தும்புகளை அனுப்பியிருந்தார்.

சணல் இந்தியாவில் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவில் வங்காளத்திலேயே சணல் அதிகமாக பயிர் செய்யப்படுகிறது. பீஹார், ஒரிஸா அஸாம் முதலிய பிரதேசங்களிலும் சணல் ஆங்காங்கே பயிர் செய்யப்படுகிறது, இந்தியாவில் முதலாவது சணல் கைத்தொழில் ஆலை, கல்கத்தாவில் 1854-ம் வருடத்தில் கட்டப்பெற்றது. கடந்த பல ஆண்டுகளாக இந்தியாவின் சணல் கைத்தொழில் மிகவும் அபிவிருத்தியடைந்திருக்கிறது. தற்போது உலகில் உற்பத்தி செய்யப்படும் சணலில் பாதிக்கு மேற்பட்ட சணல் இந்தியா சணல் ஆலைகளிலேயே உபயோகிக்கப்படுகின்றது.

காட்சிக்காக அனுப்பப்பட்ட சணல் பொருட்கள் புகைப்படங்களுடன் ஒழுங்காக அடுக்கப்பெற்றிருந்தன.

முதலாவதாக சணல் செடி பயிர் செய்தலும், சணல் செடியிலிருந்து தும்பு எடுக்கப்படும் முறைகளும் இரண்டாவதாக பலவகைப்பட்ட சணல் தும்புகள்; மூன்றாவதாக காய்ந்த சணல் நார்கள்; நான்காவதாக சணல் நாரிலிருந்து எடுக்கப்பட்ட நூல்; ஐந்தாவதாக சணலிலிருந்து செய்யப்பட்ட துணி கடைசியாக சணல் நூலால் செய்யப்பட்ட பை அல்லது சாக்கு. நேர்த்தியான சணல் நூல்களைக்கொண்டு சாக்குகளும் செய்யப்படுகின்றன. வகைக்குதவாத சணல் பொருட்கள் பொருட்காட்சி சாலையில் ஓர் பிரத்தியேகமான அறையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

லண்டனில் தும்புப் பொருட் காட்சியை ஏற்படுத்துவதற்காக விஞ்ஞான கழகத்தின் டைரக்டர் சர். ஹேரி லண்ட்ஸே எடுத்துக்கொண்ட முயற்சிகள் பாராட்டற்குரியன.

வர்த்தக ஊழியனை

வாசியுங்கள்.

Brolac

"ப்ரொலாக்"

என்னும் பெயர் வர்ணங்களில் முதன்மை பெற்று விட்டது.

நீடித்த உழைப்புக்கும் அழகிய தோற்றத்திற்கும் ப்ரொலாக் வர்ணங்களையாவரும் விரும்புகின்றார்கள்.

உங்களுக்கு தேவையான வர்ணங்களுக்கு அடியில் கண்டவரிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.

கிடைக்குமிடம்:—

T. R. ரெங்கசாமி நாயுடு,

வர்ண வியாபாரம்,

பெரியகடை வீதி, திருச்சி

சாமான்களுக்கு ரயில்வே சார்ஜுகள். (RAILWAY RATES)

The Railway do not accept responsibility for the correctness of these quotations a reference should be made to the Local Rate Advice & Foreign Rate Circulars issued by the S. I. Ry.

சாமான்கள்.	எங்கிருந்து	எந்த இடத்துக்கு	ரேட்டு மணங்குக்கு		எந்த தேதியிலிருந்து	ஷரா.
			அ.	பை.		
மூங்கில்	அங்காடிபுரம்	எர்ணுகுளம்	2	0	1—9—36	
,,	மேலட்டூர்	,,	2	0	,,	
,,	நிலாம்பூர்ரோடு	,,	2	0	,,	
,,	வாணியம்பலம்	,,	2	0	,,	
தேங்காய்	எழுக்கோன்	தூத்துக்குடி	5	10	,,	
,,	குண்டரா	,,	5	10	,,	
,,	லால்குடி	மதராஸ் பீச்	7	10	,,	
,,	ஸ்ரீரங்கம்	,,	8	2	,,	
காப்பி	கொல்லங்கோடு	கோயம்புத்தூர்	3	0	,,	
பருத்தி	சேலம் மார்க்கட்	,,	7	0	,,	
,,	,,	சிங்கானல்லூர்	6	6	15—9—36	
அகத்திஇலை	விருதுநகர்	தூத்துக்குடி	3	8	,,	
விறகு	கும்பலா	மங்களூர்	1	0	12—9—36	
,,	அம்பாசமுத்திரம்	திருநெல்வேலி	1	3	,,	
,,	ஆழ்வார்குறிச்சி	,,	1	3	,,	
,,	கீழ ஆம்பூர்	,,	1	3	15—9—36	
,,	மதுராந்தகம்	மதருஸ் பீச்	1	9	1—9—36	
,,	வில்லியனூர்	,,	2	6	,,	
,,	,,	திருச்சி கூடேஸ்	2	8	20—9—36	
நெல்	கூடலூர்	சேலம் மார்கெட்	4	6	15—9—36	
,,	எர்ணுகுளம்	காலிபரம்பாரோடு	2	6	,,	
,,	திருச்சூர்	,,	2	2	,,	
,,	வாணியம்பலம்	,,	2	4	1—9—36	
எருவு	பெரோக்	மங்களூர்	1	9	15—9—36	
பருத்திவிதை	திண்டுக்கல்	உசிலம்பட்டி	1	7	1—9—36	
தேக்கு	ஆரியன்காவு	ஆறுமுகனேரி	3	0	,,	
,,	எடமன்	,,	3	0	,,	
,,	புனலூர்	,,	3	0	,,	
,,	தென்மலை	,,	3	0	,,	
,,	தூத்துக்குடி	விருதுநகர்	2	6	,,	
நெல்	எர்ணுகுளம்	மல்லூர்கரை	1	9	24—7—36	
தான்யங்கள்	தூத்துக்குடி	கைலாசபுரம்	0	9	15—7—36	
,,	,,	குருமலை	1	5	,,	
,,	கூடலூர்	தர்மபுரி	6	0	24—7—36	
சாக்கு	தூத்துக்குடி	கைலாசபுரம்	0	9	15—7—36	
புல்	மேட்டுப்பாளையம்	குன்னூர்	2	0	1—8—36	
உருளைக்கிழங்கு	பெர்ன்ஹில்	மேட்டுபாளையம்	1	9	21—7—36	
உப்பு	அதிராம்பட்டணம்	தஞ்சாவூர்	2	0	1—8—36	
,,	தூத்துக்குடி	மகாதானபுரம்	5	8	,,	
,,	,,	குருமலை	1	5	15—7—36	
